// மிக மிக அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 3612/அ3/2022 நாள் : 23.01.2023

------

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/நகராட்சி/மாதிரி/உயர்/மேல்நிலைப்பள்ளிகளின் 2022-2023ஆம் கல்வியாண்டு – 31.08.2022 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தல் – சார்பு.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள், ந.க.எண். 054550/சி3/இ1/2022, நாள் 23.01.2023.

------

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணைஇயக்குநர் (ப.தொ) அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு/நகராட்சி/ மாதிரி உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் 06 முதல் 10 வகுப்புகள் வரை உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை'க்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதனடிப்படையில் இக்கல்வியாண்டிற்கு 31.08.2022 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப (EMIS இல் உள்ளவாறு) பட்டதாரி ஆசிரியர் பணியிடம் நிர்ணயம் செய்ய ஏதுவாக ஆசிரியர் வருகைப்பதிவேடு மற்றும் அளவுகோல் பதிவேட்டுடன் சரிபார்த்து பூர்த்தி செய்து அதனுடன் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணாக்கர்களின் விவரங்களுடன் (EMIS Print Copy), அளவுகோல் பதிவேட்டின் நகல் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து தனிநபர் மூலம் உயர்நிலைப்பள்ளிகள் 24.01.2023 முற்பகல் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 24.01.2023 பிற்பகல் மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலக velloreceo@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு அதன் 2 நகலினை ( Hard copy) அ3 பிரிவில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு/அரசுமாதிரி/நகராட்சி/ உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – 1 புதிய மாதிரி படிவங்கள்

ஒம்/-xxxxxxx,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

பெறுநர்
அரசு / நகராட்சி / அரசு மாதிரி உயர்/ மேல்நிலை பள்ளி, தலைமை யாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல் – மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர் .